RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s812

# புறநானூற்று ஔவையின் ஆளுமை

த. அம்மு [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்.எஸ்.கே.வி.கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்-631502, தமிழ்நாடு, இந்தியா

# Personification of Puranaanutru Avvai

D. Ammu [a, *]

[a] Department of Tamil, SSKV Women College, Kanchipuram-631502, Tamil Nadu, India

* Corresponding Author: ammusskv78@gmail.com

Received: 06-05-2021
Revised: 13-05-2022
Accepted: 24-05-2022
Published: 20-07-2022

Check for updates

**ABSTRACT**

Personality is the ability to govern oneself and others. In psychological terms, personality refers to a person's organised dialectical characteristics and the resulting attitudes, behaviors, feelings, and thoughts. Personality in general refers largely to one's outward appearance. Although women were not given full freedom during the Sangam period, they excelled in many fields during that time. As well as excelling in various fields, they were well versed in Tamil as well. Reminiscing about the excellence of Sangam period woman poet Avvaiyaar and studying her language skills and intellect can teach us a lot. Sangam women lived a life of virtue, chivalry, love, pleasure and nature. Because they were literate, they became creators and recorded the lives of women. Women were the root of the akappaatalkal (poetry of love genre). Most of the epithets built on femininity are seen in Akappaatalkal as Thalaivi (woman-lead), Thozhi (friend), Virali (young girl), Natraai (mother), Sevilitthai (nanny). Literature is the one that captures various aspects of life. In it, the speech and life of Purananutru Avvaiyaar are seen with pride. Though Athiyaman Neduman Anci was a king of a small region, she befriended him and stayed in his court till the end. She sang heroic songs, especially for the king. She tirelessly supported Anji till the end. She had lived a simple life and was considered a worldly poet because of her respect for humanity and culture. The new saying is that good things happen and evil things are destroyed by women. Women are gifted with wisdom and intelligence. The qualities of excellence, knowledge, humility, etc. are inherent in nature. The purpose of this article is to look only at the personality of Puranaanutru Avvaiyaar.

**Keywords:** Avvaiyaar, Sangam women Poet, Language Skills, Virtue

## முன்னுரை

நல்லவை நடப்பதும் பெண்ணாலே தீயவை அழிவதும் பெண்ணாலே என்பதுதான் புதுமொழி மதிநுட்பத்திலும்; நுண்ணறிவிலும் பெண்கள் திறமை படைத்தவர்கள் மேன்மை அறிவு பணிவு முதலிய குணங்கள் இயற்கையிலேயே அமையப் பெற்றவர்கள் இதில் புறநானூற்று ஔவையின் ஆளுமை பற்றி மட்டும் நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆளுமை

தன்னைத் தானே ஆள்வதும் பிறரை ஆளும் வல்லமையையும் ஆளுமை எனலாம். உளவியல் நோக்கில் ஆளுமை என்பது ஒருவனின் ஒழுங்கமைந்த இயங்கியல் பண்புகளும், அவை

தோற்றுவிக்கும் தோரண நடத்தைகள், உணர்வுகள் சிந்தனைகளையும் குறிக்கிறது. பொதுவழக்கில் ஆளுமை என்பது ஒருவனின் வெளித் தோற்றத்தைப் பெரிதும் குறிக்கிறது.

சங்ககாலத்தில் மகளிருக்கு முழு உரிமை தரப்படவில்லை என்றாலும் அதையெல்லாம் கடந்து அவர்கள் அந்தக் காலத்திலேயே பல்துறைகளில் சிறந்தோங்கி சாதனை நிகழ்த்தியிருக்கிறார்கள். பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியது போலவேத மிழிலும் புலமை மிக்கவர்களாகத் திகழ்ந்தார்கள்.

சங்ககாலப் பெண்பாற் புலவர் ஔவையாரின் சிறப்பைநினைவுக் கூர்வதன் வாயிலாகவும் அவர்களின் மொழித்திறன் அறிவுத்திறன் ஆய்வதின் மூலமாகவும் பல தெரிந்து கொள்ளமுடிகிறது (Varatharasan, 1978). சங்ககாலப் பெண்கள் அறம், மறம், காதல் இன்பம் இயற்கை இவற்றோடு இணைந்த வாழ்க்கையை வாழ்ந்தனர். அவர்கள் கல்வியறிவு பெற்றிருந்ததால் படைப்பாளிகளாகத் திகழ்ந்ததோடு பெண்களின் வாழ்க்கையையும் பதிவு செய்துள்ளனர். அகப்பாடல்களின் ஆணிவேர்களாகவே பெண்கள் திகழ்ந்துள்ளனர். தலைவி தோழி விறலி நற்றாய் செவிலித்தாய் என்று பெண்மையின் மீது கட்டமைக்கப்பட்ட அகப்பாடல்களையே பெரும்பாலும் காணமுடிகிறது.

## ஔவையார் என்ற அறிவுமேதை

இலக்கிய வரலாற்றில் ஐந்து ஔவையார்கள் இருந்தனர். சுட்டபழம் வேண்டுமா, சுடாதபழம் வேண்டுமா எனக் கேட்டு முருகப் பெருமானால் ஞானமூட்டப்பட்ட புராண ஔவையார் அதற்குப் பிறகு கடையேழு வள்ளல்களில் ஒருவரான அதியமானுக்கு அமைச்சராகவும் தூதராகவும் திகழ்ந்தவர் புறநானூற்று ஔவையார் இதன் மூலம் புறநானூற்றுக் காலத்திலேயே பெண்களின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் மன்னர்கள் மதிப்பளித்துச் சிறப்பித்திருக்கிறார்கள் என்பதை உணரலாம்.

ஔவையார் பாடியபாடல்கள் இன்றைக்கும் பொருத்தமானவையாக உள்ளன. திருவள்ளுவர் இரண்டு வரிகளில் குறள் எழுதினார். ஔவையார் ஒரேவரியில் ஆத்திச்சூடி பாடினார் ‘அறம் செய் என்று கட்டளையிடாமல் ‘அறம் செய விரும்பு’ என்று பாடிய பெருந்தகை ஔவை (Ugin Rositta, 2021). தமிழனுக்கு நீதி அரசியல் வாழ்வியல் காதல் வீரம் ஒழுக்கம் ஆகியவற்றைக் கற்றுத் தந்து அதன் வழிநடக்கச் சொன்னவர்கள் ஔவையார்கள். ஔவையார் வீரத்தையும் கொடையையும் மட்டும் பாடவில்லை. காதலையும் அறத்துடன் கலந்து பாடியுள்ளார். சங்ககாலப் பெண்பாற் புலவர்களில் ஔவையார் மட்டும் 59 பாடல்கள் பாடிமற்றவர்களை விஞ்சி நிற்கிறார்.

தமிழ் கூறும் நல்லுலகில் ‘ஔவை’ எனும் பெயரை அறியாதார் இலர்.

“அறம் செய விரும்பு”

“கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு”

“கற்றதுகைம் மண்ணளவு கல்லாதது உலகளவு”

இவை மக்களிடையே அன்றாட நடைமுறை வாழ்வில் பயன்படுபவை. ஔவை தந்தகருத்துக் கருவூலங்களாம். இவ்வறிவுத் தொடர்கள் கல்லாதார் நாவிலும் களிநடம் புரியக் காணலாம்.

ஔவையார் சங்க காலத்தில் புகழ்பெற்ற பெண்பாற் புலவராகத் திகழ்ந்துள்ளார். அதனால் தமிழகத்தில் வழிவழியாகச் சிறப்புடைய பெண்பாற் புலவர் பலர் ஔவை என்றே அழைக்கப்பட்டு வந்துள்ளனர். நூற்றாண்டு வரிசையில் விரிவாகத் “தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதிய அறிஞர்.மு. அருணாசலம் ஆறு ஔவையார்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். சான்றோர் (Somasundranaar, 1972). தமது இலக்கிய வரலாற்றில் பல ஔவையார்கள் காலந்தோறும் வாழ்ந்து வந்துள்ளமையைச் சுட்டிக் காட்டுகிறார்”; (Arunachalam, 1976).

ஔவை பெயரால் அமைந்த தொடர்கள் பாடல்கள் எல்லாமே திட்ப நுட்பமுடையவை உலகியலறிவு சார்ந்தவை பட்டறிவு முத்திரைகள் பதித்தவை எல்லோர் நாவிலும் எளிதில் ஒலிக்கப்படுபவை எனலாம்.

ஔவையார் அனைவருமே வேந்தர்களை விடவும் எளிய வள்ளல்களையே போற்றுபவர்கள் மக்களிடையே மக்களாக வாழும் மனப்பாங்குடையவர்கள் நன்றியுணர்வு மிக்கவர்கள் நல்லவர்களைப் போற்றியும் அல்லாதவர்களைத் தூற்றியும் அஞ்சாமல் வாழ்ந்தவர்கள். சங்ககால ஔவை நீதிநூல் ஔவை சிவநெறிச் சார்புடன் காணப்படுகின்றனர்.

"இங்ஙனம் பெண்ணினத்திற்கே சிறப்புத் தேடும் வகையில் ஔவை வரலாறு அமைகிறது. உலகப் பெண்பாற் புலவர்கள் இடையே தமிழ் ஔவைக்குச் சிறப்பிடம் உண்டு என்று அறிஞர்கள் போற்றுகின்றனர். கிரேக்கப் பெரும் புலவராகிய 'சாபோ' எனப்படும் பெண்பாற் கவிஞருடன் தமிழ் ஔவையை ஒப்பிட்டுத் திறனாய்ந்து கூறுகின்றனர். ஆயிரம் ஆண்பாற் புலவர்கள் இருப்பினும் அவர்களுக்கெல்லாம் ஈடுகொடுக்கும் வகையில் ஔவைப் புலமையாலும் பண்பாலும் சிறந்து விளங்கியமை போற்றுதலுக்குரியதேயாகும். என்கிறார் ஆசிரியர்". 'ஔவை' என்ற சொற்பொருளாக தாய் மூதாட்டி பெண்துறவி தவப்பெண் என்றெல்லாம் அகராதிகள் பொருள் கூறும் (Thamizhannal, 2003).

"மணம் செய்து கொள்ளாதிருந்து பருவத்தால் முதிர்ச்சி பெற்றுத் தவக்கோலம் தாங்கி கல்வி கேள்விகளில் மேம்பட்டு விளங்கிய பெண்டிரை இயற்பெயர் சுட்டாது அவ்வை என்று வழங்கினர் போலும்" என்று ஆசிரியர் கருதுகிறார் (Arunachalam, 1976).

இந்நூற்றாண்டின் மகாகவி எனப் போற்றப்படும் பாரதியாரின் மனத்தையும் ஈர்ந்துள்ளது. சான்றோர் மு.வ. இது பற்றிக் குறிப்பிடும் பொழுது "இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதியாரும் இவருடைய முறையைப் பின்பற்றி இவர் நூலின் பெயரையே போற்றி 'புதிய ஆத்திசூடி' இயற்றினார் என்றால் இவர் காட்டிய வழி எவ்வளவு போற்றப்பட்டு வந்திருக்கிறது என்பதை உணரலாம்." ஏன்கிறார். அதன் பிறகு பாவேந்தர் முதல் கவிஞர் பலர் புதிய ஆத்தி சூடிகளையும் ஆய்வுசூடி தமிழ்சூடி என இன வகைகளாகவும் பாடியுள்ளனர். இதனால் ஔவையின் புதுமை படைக்கும் புலமைத் திறமும் ஆளுமை திறமும் புலனாகின்றது (Somasundranaar, 1980).

## சங்ககால ஔவையார்

காலந்தோறும் ஔவையார் புகழ் விளங்கத் தொடங்கிவைத்தவர் சங்ககால ஔவையாரே ஆவார். சங்க ஔவையின் வாக்கும் வாழ்வும் பெருமிதமுடையனவாய்க் காணப்படுகின்றன. அவர் மூவேந்தர்களை நாடிஅவர்கள் அரண்மனைகளில் தங்கி வாழ விரும்பினாரல்லர். அதியமான் நெடுமான் அஞ்சி குறுநில மன்னனேயாயினும் அவனிடம் நட்பூண்டு அவனதுஅவைக்களப் புலவராய் இறுதிவரை திகழ்ந்தனர். அவன் சேர வேந்தனொடு பொருது நின்ற காலத்திலும் அவர் தம் தலைவனுக்காகவே வீரம் செறிந்த பாடல்களைப் பாடினார். மூவேந்தரும் பலஆண்டுகள் முற்றுகையிட்ட காலத்தும் தன் நண்பன் பாரியைப் பிரியாது நின்ற கபிலர் போலவே ஔவையும் அஞ்சியின் உடனிருந்து அவனுடைய இறுதிகாலம் வரை அயராது துணைநின்றார். மேலும் சில சிறிய வள்ளல்களையே நாடிசென்று எளிய வாழ்க்கையே வாழ்ந்துள்ளார். அன்று முதல் இன்றுவரை ஔவை என்னும் பெயர் பெண் குலத்திற்கே முடிமணியாய்ச் சிறப்புற்றுத் திகழ்கிறது. அவரது புலமையும் பாட்டுத்திறமும் பண்பாடும் அவரை உலகப் பாவலர் வரிசையில் வைத்தெண்ணுமாறு அத்துணை வலுவுடனும் பொலிவுடனும் திகழ்கின்றன.

ஔவையார் பாடியனவாக சங்க இலக்கியத்துள் 59-பாடல்கள் கிடைக்கின்றன. அவற்றுள் அகப்பாடல்கள்-26 புறப்பாடல்கள் -33 தொகைகளாகிய குறுந்தொகை நற்றிணை அகநானூறு புறநானூறு ஆகியநான்கு தொகைகளில் மட்டுமே அவர் பாடல்கள் காணப்படுகின்றன. புறப்பாடல்களில் 22-பாடல்கள் அதியமான் நெடுமான் அஞ்சியைப் பற்றியன. மூன்று பாடல்கள் அவன்மகன் பொருட்டெழினி பற்றியன. இவற்றிலிருந்து ஔவையார் அஞ்சியின் உயிர் நண்பராய் அவைக்களப் புலவராய் வாழ்நாள் முழுவதும் இருந்தாரென்பது புலனாகின்றது (Puliyur kesigan, 1958).

## அதியமான் நெடுமான் அஞ்சி

பனம்பூ மாலையையே தனக்கும் அடையாள மாலையாக உடைய அதியர் குடியில் பிறந்தவன் நெடுமான் அஞ்சி தமிழகத்தில் 'ஏழு வள்ளல்கள்' என எண்ணி மக்களால் போற்றப்பட்டவர்களில் அதியனும் ஒருவனாவான். மூவேந்தர்கள் பேராற்றலுடனும் கொடைப் பண்புடனும் திகழ்ந்தனராயினும் வள்ளல்கள் எனத் தமிழ்ப் புலவர்கள் இனங்கண்டு போற்றிய எழுவருமே குறுநிலத் தலைவர்களாக இருத்தல் சிந்தித்தற்குரியதாகும். பேகன் பாரி காரி ஓரி ஆய் நள்ளி அதியன் எனும் எழுவரும் குறுநிலமன்னர்களாக இருந்தும் கொடை மடம் பட்டு வாரி வழங்கியமையால் மக்களால் பெரிதும் போற்றப்பட்டுள்ளனர் எனலாம் (Malathi & Sundaramoorthi, 2021).

சிறுபாணாற்றுப்படையில் 99-103 வரியில் நல்லூர் நத்தத்தனார். இவ்வேழு வள்ளல்களையும் வரிசைப்படுத்தும் போது அதியனைக் குறிப்பிடுகிறார்.

"மால்வரைக்

கமழ்பூஞ்சாரல் கவினியநெல்லி

அமிழ்துவிளைதீங்கனிஒளவைக்குஈந்த

உரவுச்சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்

அரவுக் கடல் தானைஅதிகனும்"

என்று அதியனைச் சிறப்பிக்கின்றார் (Somasundranaar, 1980). இவ்வகையில் அதியன் ஒளவைக்குக் கிடைத்தற்கரிய நெல்லிக்கனி கொடுத்ததால் பெரும்புகழ் பெற்றான் என அறிகின்றோம்.

## அவைக்களப் புலவர்

அஞ்சியின் திருவோலக்கத்தை ஒளவை நற்றிணைப் பாடல் 381-ல் சிறப்பாகக் குறிப்பிடுகின்றார்.

"ஓங்குசெலல்

கடும்பகட்டுயானைநெடுமான் அஞ்சி

ஈரநெஞ்சம் ஓடிச் சேண் விளங்கத்

தேர்வீசு இருக்கைபோல"

புறநானூற்றுப் பாடல் 88 89-ல் பல ஆண்டுகள் இவர் அவைக்களப் புலவராய் வாழ்நாளிற் பெரும் பகுதி கழித்தமையால் 'என் ஐ' (என் தலைவன்) என்றே உரிமையுடன் பாடுகின்றார் (Somasundranaar, 1952).

'முழவுத்தோள் என் ஐ'

'என் ஐ'

என்ற 'என் ஐ இளையோற்கு' (என் தலைவனின் மகனுக்கு-96) என இவ்வாறு சுட்டுமிடங்களும் இறுதியில் பாடிய கையறுநிலைப் பாடல்களும் இவர்களது நட்பின் சிறப்பைக் காட்டுகின்றன (Somasundranaar, 1952).

'மடவோர் மகிழ்துணை'

இல்லோர் ஒக்கல் தலைவன்'

என்று புறநானூறு 315 95ஆம் பாடலில் ஒளவையார் குறிப்பிடுகின்றார் (Somasundranaar, 1952). அவன் கூடுதலாக இருந்தால்தான் உண்பானாம் (315) மிகுதியாக இருக்கும் போதுவிருந்து கொடுத்து சுருங்கிய போது இருப்பதைப் பகிர்ந்து உண்பாணாம் (95) பிறர்க்கு ஈவதிலும் உணவு தந்து உபசரிப்பதிலும் கருத்தாக இருந்தமையானும் ஏழை எளியவர் எல்லோர்க்கும் எப்போதும் உதவியமையானும் இவனது புகழ் எல்லையின்றி எங்கும் பரவியது.

இங்ஙனம் எளியோனாய் திகழ்ந்த இவன் போரிடுவதில் அரியவர்க்கும் அரியபோர் மறவனாகவே திகழ்ந்தான். 'எம்முளும் உளன் ஒருபொருநன்' என இவனை போர் வீரனாகவே அறிமுகப்படுத்துகிறார். புறநானூறு 88 90 வது பாடலில்

'அம் பகட்டு மார்பினையும் முழவுத் தோள்களையும் உடையவன்'

'எழுமரம் கடுக்கும் தாள்தோய் தடக்கையை உடையவன்'

இவன் உடல் வலிமையுடையவனாகத் திகழ்ந்தமை பலபாடல்களில் அழுத்தமுற ஓவியம் போலச் சித்தரித்தும் சிற்பம் போல வடித்தும் காட்டப்படுகிறது (Somasundranaar, 1952).

"பொதுவில் தூங்கும் விசியுறுதண்ணுமை

வளிபொருதெண்கண் கேட்பின்

அதுபோர் என்னும் தலைவன்"

என்ற புறநானூறு 89வது பாடலில் தலைவனின் வீரத்தை சிறப்பித்து கூறியுள்ளார் (Somasundranaar, 1952).

## நெல்லிக்கனி

ஔவைக்கு அதியன் ஈந்த நெல்லிக்கனி உலகப் புகழுக்கு உரியதாயிற்று அதியனைப் புகழ்பெற்ற ஏழு வள்ளல்களுள் ஒருவனாக ஆக்கியதும் அந்நிகழ்ச்சியே

'பால்புரைபிறைநுதல் பொலிந்தசென்னி

நீலமணிமிடற்றுஒருவன் போல

மன்னுகபெருமநீயே!

சாதல் நீங்களமக்குஈத்தனையே'

அதியன் அன்று அக்கனியைத் தானே உண்டிருந்தால் அந்நிகழ்ச்சி அன்றே அக்கணமே அவனொடு மறைந்திருக்கும் 'ஆதலை உள்ளத்துள் அடக்கி' ஔவைக்குக் கொடுத்ததால் புறநானூறு 91வது பாடல் வழி அஞ்சிதான் சாதலை' அறியாதவனாயினான் (Somasundranaar, 1952).

தனக்குமகன் பிறந்ததாகக் கேள்விபட்டதும் போர் களத்திலிருந்தவாறே நேரே குழந்தை பிறந்த இடத்திற்கே வந்து புறநானூறு 100 வது பாடல் வழி

"செறுவர் நோக்கியகண்தன்

சிறுவனைநோக்கியும் சிவப்பானாகவே"

அஞ்சியின் போராற்றல் கண் சிவப்பைக் கண்ணருகே கொண்டு வந்து காட்டுகிறார் (Somasundranaar, 1952).

## தமிழ்த்தூதுவர்

அதியமான் அஞ்சி, ஒருமுறைதன்னுடன் போர் செய்யப் புறப்பட்ட தொண்டைமானிடம் ஔவையைத் தூதனுப்பினான்.

ஔவையார் தூது செல்வதற்கு வேண்டியனவாகத் திருவள்ளுவர் தனது 682வது குறளில் கூறிய பண்பு நலன்கள் யாவும் வாய்க்கப் பெற்றவர்.

"அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்கு

இன்றிய மையாத மூன்று"

தொண்டைமான் ஔவையையவரவேற்றுத் தன் படைக்கலக் கொட்டிலைக் காட்டினான் (Rama Kanagasubburathinam, 2015).

“இவ்வே

பீலிஅணிந்துமாலை சூட்டிக்

கண்திரள் நோன்காழ் திருத்திநெய்யணிந்து

கடியுடைவியனகரவ்வே!

அவ்வே

பகைவர்க்குத்திக் கோடுதுதிசிதைந்து

கொற்றுறைக் குற்றிலமாதோ!

புறநானூறு 95வது பாடலில் சொல்லாமற் சொல்லியவைவஞ்சப் புகழ்ச்சி ஆகும். ஔவையின் அஞ்சாமையும் சாதூரியமும் புலமையும் இதனால் புலனாகின்றன (Somasundranaar, 1952).

“எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே”

“பலநாள் பயின்றுபலரொடுசெல்லினும்

தலைநாள் போன்றவிருப்பினன் மாதோ!”

இவ்வாறு புறநானூறு 206 101வது பாடலில் பிணக்கத்தோடு தொடங்கிய நட்புபிறகு எப்படியெல்லாம் மாறி உறுதிப்படுகிறது என்பதை விளக்கப்பட்டுள்ளது (Somasunsdranaar, 1952).

“என் வாய்ச் சொல்லும் அன்னஒன்னார்”

மாணிக்கவாசகர் தம் வார்த்தை இறைவனைப் பற்றியதாதலால் ‘மணிவார்த்தை’ ஆகிறது என்பார் (Somasundranaar, 1952). ஔவையார் அதியமான் மதிப்பதால்தான் தம் சொற்கள் பொருளும் இனிமையும் உடையனவாகின்றன என்று புறநானூறு 92 வது பாடல் மூலம் கூறுகிறார்.

அஞ்சி இறந்த போது கண்ணீர் ஆறாகப் பெருக ஔவை பாடிய கையறுநிலைப் பாடல்கள் மூன்றும் புறநானூற்றில் 235வது பாடலில் நடப்பியலாய்த் துக்கத்தை அப்படியே வெளிப்படுத்துகின்றது எனலாம்.

‘சிறியகட் பெறினேஎமக்கீயும் மன்னே!’ (Somasundranaar, 1952).

## பொருண்மொழிக் காஞ்சி

உலகியலை எடுத்துக்காட்டி என்றும் நிலையான அறவுரைகளைக் கூறுவதே பொருண்மொழிக் காஞ்சி எனப்படும்.

“நாடாகொன்றோகாடாகொன்றோ

அவலாகொன்றோமிசையாகொன்றோ

எவ்வழிநல்லவர் ஆடவர்

அவ்வழிநல்லைவாழியநிலனே”

இவ்வாறு புறநானூறு 187வது பாடலின் வழி ஒரு பெண்பாற் புலவர் “ஆணாதிக்கம் கொண்ட உலகைப் பார்த்து அன்றே அறை கூவியுள்ளார் (Somasundranaar, 1952). இயற்கையால் நன்மைதான் விளையும் பெண்களாலும் உலகிற்கு நன்மையே உளதாகும். தம்மையும் கெடுத்துக் கொண்டு, பிறரையும் கெடுப்பவர்கள் ஆடவர்களே. அதனால் ஆடவர் நல்லவராயிருந்தால் உலகமும் நல்லதாக இருக்கும் அவர்கள் கெட்டவரானால் உலகமும் கெட்டழியும்” என்கிறார் (Thamizhannal, 2003).

'ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்பதை இது மறுக்கிறது எனலாம்.

## முடிவுரை

புறநானூற்று ஔவையார் பெண்மையின் உயரிய ஆளுமையின் அடையாளமாகவும் நுட்பமான அறிவுணர்வின் தலைமையாகவும் படைப்பாற்றல் மிக்கவர்களாகவும் தனித்துவத்துடன் தன்னுணர்வினை திறத்தோடு வெளிப்படுத்தக் கூடியவர் என்பதை அவருடைய சந்துசெய்வித்தல், ஊக்குவித்தல், மதிநுட்பம், அவைக்களப் புலவரிலும், தமிழ் தூதிலும், நிலையாமையிலும் புறநானூற்றின் வழி தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

## References

Arunachalam, M., (1976) Tamil Ilakkiya Varalaru, Madurai Kamaraj University, Madurai, India.

Avvai Duraisamy pillai, S., (1996) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Malathi, C., Sundaramoorthi M., (2021) War Specials of Vallal Athiyaman Neduman Anji, International Research Journal of Tamil, 3(3), 38-46. https://doi.org/10.34256/irjt2135

Puliyur kesigan, (1958) Purananuru, Paari niliyam, Chennai, India.

Rama Kanagasubburathinam, (2015) Thirukkural Unarvurai, Kavanagar Muzhakkam, Chennai, India.

Somasundranaar, P.V., (1952) Nattrinai Moolamum Uraiyum, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Somasundranaar, P.V., (1980) Paathupattum moolamum uraiyum, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Thamizhannal, (2003) Avvaiyar, Meenakshi book store, Madurai, India

Ugin Rositta, M., (2021) Avvai- An Epistemic Advantage, International Research Journal of Tamil, 3(4), 1-5. https://doi.org/10.34256/irjt2141

Varatharasan, M., (1972) Tamil Ilakkiya Varalaru, Paari niliyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License